ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,715 — 1966 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා — 1966.9.30

14,715 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 267 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 268 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான் பதுளை மாவட்டத்திலுள்ள இறில்பொலே கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு அப்பிரிவிற்கிணங்க அதன் கிராமப் பிரதேசத்தில் ஒரு நிலவரியை விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
செப்தெம்பர் 15, 1966.

9-1312—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

---

### வாடகை மட்டுப்படுத்தற் சட்டம்

(274 ம் அத்தியாயமான) வாடகை மட்டுப்படுத்தற் சட்டத்தின் 2ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இந்த அறிவித்தல் வாயிலாக :—

(அ) முன்னைய சுகாதார சபைப் பட்டினமான பாதுக்கைக்குள் தற்போது அடங்கியிருக்கும் பிரதேசத்தை மேற் சொல்லப் பட்ட சட்டம் நடைமுறையிலிருக்கும் ஒரு பிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதுடன் :

(ஆ) இந்த அறிவித்தல் கசெற்றில் பிரசுரமாகும் திகதியை இந்த அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியாகவும் நியமிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 19.9.66.

9-1333—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந உ.

## கொச்சிக்கடைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1966 ஆம் ஆண்டுக்கான விசேட மலசல கூடவரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும், அப்பிரிவினுலவருக்குரித்தாக் கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கொடுபட்ட உள்ளூராட்சியமைச் சரின் அங்கீகாரத்துடனும், கொச்சிக்கடைப் பட்டினத்தினுள்ளேயுள்ள அசைவற்ற ஆதனமெல்லாவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு நான்கு வீதமானதும், முறையே யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் சமமான மூன்று தவணைப் பணங்களாகக் கொடுபடற்பாலதுமான விசேட மலசல கூட வரியொன்றை கொச்சிக் கடைப் பட்டினசபை துணைவிதிகளின்படி விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் விலக்குகளுக்குமமைய 1966 ஆம் ஆண்டுக்கு விதித்திருக்கின்றதென இதனுல் அறிவிக்கப்படுகின்றது.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சியமைச்சு.

கொழும்பு, 15.9.1966.

9–1332—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

---

# துணை விதிகள்

ச.வ—பீ 18/65.

## மாவனெல்ல பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ் மாவனெல்ல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 15 ந் உ.

### துணைவிதிகள்

1. பின்வருவன அபாயகரமான தொழில்களெனக் கருதப்படல் வேண்டும்.
(அ) செம்பாறுங்கல், சரளைக்கல் அல்லது கருங்கல் எடுக்கத் தோண்டுதல் ;
(ஆ) ரப்பர் தகடுகள் சேகரித்து வைத்தல் ;
(இ) மோட்டார் வாகனங்கள் சுத்தஞ் செய்வதற்கு ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஈ) மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்க ஒரு நிறுவனம் வைத்திருத்தல் ;
(உ) டயர் ரியூப்புகள் அழல்வெப்பத்திற்குட்படுத்தி ஒட்ட ஒரு நிறுவனம் வைத்திருத்தல் ;
(ஊ) தகர வேலைக்கடை ஒன்று வைத்திருத்தல் ;
(எ) ஆபரணம் உற்பத்தி செய்ய ஒரு நிறுவனம் வைத்திருத்தல் ;
(ஏ) வானெலிப்பெட்டிகள் பழுதுபார்க்க ஒரு நிலையம் வைத்திருத்தல்;
(ஐ) கழிவு இரும்பு விற்பனை செய்ய ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஒ) இரும்புச் சாமான்கள் விற்பனை செய்ய ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஓ) தச்சு வேலைத் தலம் ஒன்று வைத்திருத்தல் ;
(ஔ) மரக்காலை ஒன்று வைத்திருத்தல் ;
(க) விறகுக்காலை ஒன்று வைத்திருத்தல் ;
(ங) தளபாடக்கடை ஒன்று வைத்திருத்தல் ;
(ச) அச்சுயந்திரசாலை ஒன்று வைத்திருத்தல் ;
(ஞ) தேயிலை உற்பத்திச்சாலை ஒன்று வைத்திருத்தல் ;
(ட) வெற்றுப் போத்தல்கள் சேகரித்து வைத்திருத்தல் ;
(ண) வெற்றுச் சாக்குகள் சேகரித்து வைத்திருத்தல் ;
(த) கொப்பரை சேகரித்து வைத்திருத்தல் ;
(ப) மின்சக்தி அல்லது எண்ணெய், நீராவி அல்லது வேறேதாவது சக்தியால் இயக்கப்படும் இயக்குப் பலத்தால் செயற்படுத்தப்படக் கூடிய இயந்திரசாதனமுள்ள ஒரு தொழிலை வைத்தல்.

2. பின்வருவன அருவருப்புள்ள தொழில்களெனக் கருதப்படல் வேண்டும் :—
(அ) கிரேப் ரப்பர் உற்பத்தி செய்வதற்கும் அதற்குப் புகையூட்டுவதற்கும் ஒரு தொழிற்சாலை வைத்திருத்தல் ;
(ஆ) ரப்பர் தகடுகள் உற்பத்தி செய்ய ஒரு கையுருளை வைத்திருத்தல் ;
(இ) ரப்பர் தகடுகட்குப் புகையூட்ட ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஈ) சுருட்டு உற்பத்தி செய்தல் ;
(உ) இயந்திர சாதனத்தால் நெற்குற்றல் ;
(ஊ) இயந்திர சாதனத்தால் மிளகாய், அல்லது வேறு மசாலைத்தூள்கள் அரைத்தல்.

3. பின்வருவன அபாயகரமும் அருவருப்பும் உள்ள தொழில்களெனக் கருதப்படல் வேண்டும் :—
(அ) தகட்டு ரப்பர் உற்பத்தி செய்வதற்கும், புகையூட்டுவதற்கும் ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஆ) ஒரு அரிசி ஆலை அல்லது ஒரு நெற்குற்றும் ஆலை வைத்திருத்தல் ;
(இ) ஒட்சிமுறைக்காய்ச்சியிணைப்பதற்கான ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஈ) மின்கலங்கட்கு மின்னூட்டுவதற்கு ஒரு நிலையம் வைத்திருத்தல்;
(உ) ஒரு கம்மாலை வைத்திருத்தல் ;
(ஊ) தும்பினுல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேகரித்து வைத்திருத்தல் ;
(எ) வாயுபானங்கள் உற்பத்தி செய்ய ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஏ) ஓடு அல்லது செங்கல் உற்பத்தி செய்தல் ;
(ஐ) ஓடு செங்கல் ஆகியன சேகரித்து வைத்திருக்க ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஒ) சுண்ணாம்புச்சூளை வைத்திருத்தல் அல்லது சுண்ணாம்பு சேகரித்து வைத்திருத்தல் ;
(ஓ) உலர் சலவை செய்வதற்கும் சாயம் இடுவதற்கும் ஒரு நிலையம் வைத்திருத்தல் ;
(ஔ) கொப்பரை உற்பத்தி செய்தல்.

9–1331—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

---

## ஹிக்கடுவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளுக்கமைய ஹிக்கடுவைப் பட்டின சபையால் ஆக்கப் பட்டு, அக் கட்டளைச் சட்டத்தின் 153ம் பிரிவுக்கமையத் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதி.

நிரந்தரச்செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
செப்தெம்பர் 15, 1966

### துணைவிதி

சபையால் ஆக்கப்பட்டனவும், 1948 ஏப்ரல் 16ன் 9,853ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டனவும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டனவுமான துணை விதிகளின் 1 ம் துணைவிதியில் " சொற்பொருள் விளக்கம் " என்ற தலையங்கத்தின் கீழ், அருவருப்பான அல்லது அபாயகரமான தொழில் என்ற வரையறையில் " அருவருப்பான தொழில்கள் " என்பதில் " ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் " என்றுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் இதனுல் மேலும் திருத்தப்படுகின்றன :—

" ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் தளவாடக்கடை ஒன்று வைத்தல் அல்லது தளவாடங்கள் உற்பத்தி செய்தல், சவப்பெட்டிகள் செய்தல் அல்லது சேகரித்து வைத்தல் " அத்துடன் " அபாயகரமான தொழில் " என்பதில்,

" 12 டசின் போத்தல்களுக்கதிகமாக வாயுப் பானங்கள் சேகரித்து வைத்தல் " என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவற்றைச் சேர்த்தல் மூலமும் :—

" 12 டசின் போத்தல்களுக்கதிகமாக வாயுப் பானங்கள் சேகரித்து வைத்தல், படங்களுக்கு அல்லது ஒளிப்படங்களுக்குச் சட்டமிடுதல், மசகெண்ணெய் சேகரித்து வைத்தல் ".

9-1310—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

## சுன்னாகம் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழும் 156 ஆம் பிரிவின் கீழும், சுன்னாகம் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ்த் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 15.9.1966

#### துணை விதிகள்

1. இத்துணை விதிகளில் :—

" தலைவர் " என்ற பதம் சபையின் தலைவரைக் குறிக்கும்.

" சபை " என்ற பதம், சுன்னாகம் பட்டின சபையைக் குறிக்கும்.

" நகரப்பிரதேசம் " என்ற சொற்றொடர் இச்சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசத்தைக் குறிக்கும்.

2. நகரப்பிரதேசம் முழுவதிற்கும் அல்லது குறிக்கப்பட்ட அதன் ஒரு பகுதிக்கு, தோட்டிவேலைச் சேவை தாபிக்கப்பட்டதும், இச்சேவை வசதி ஏற்படுத்தப்பட்ட பிரதேசத்துள் குடியிருப்பவர், தனது வளவினுள்ள சகல குப்பை, சாம்பல் அழுக்குகளையும் ஏனைய ஊத்தைகளையும், பெருக்கி, சபைத் தலைவர் அங்கீகரிக்கும் பருமனிலும் அளவிலும் தகுந்த மூடியுடன் உள்ள ஒரு வாளியில் அல்லது ஊத்தைத் தகரத்தில் போட்டு வைத்தல வேண்டும்.

3. துணை விதி 2 இல் குறிக்கப்பட்ட ஒரு வளவில் குடியிருப்பவர்—

(அ) பறை சாற்றுதல் மூலம் அல்லது ஏனைய விதத்தில் சபைத் தலைவர் காலத்திற்குக் காலம் அறிவிக்கும் நியதிப்படி, குப்பை வாளியை அல்லது தகரத்தைக் குடியிருக்கும் வளவிற்கு வெளியே தெரு ஓரத்தில், வாகனங்கட்குத் தடை உண்டாகாத வகையில் வைப்பித்தல் வேண்டும்.

(ஆ) சபையின் தோட்டி வேலைத் தொழிலாளர், குப்பைவாளியை அல்லது குப்பைத் தகரத்தைத் துப்பரவு செய்த நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் அவற்றை உள்ளே எடுப்பித்தல் வேண்டும்.

4. இரண்டாந் துணைவிதியில் குறிக்கப்பட்ட குப்பை வாளியையோ குப்பைத் தகரத்தையோ மூன்றாந் துணை விதியில் குறிக்கப்பட்ட நேரங்களில் தவிர மற்றைய வேளைகளில் ஒரு தெரு ஓரத்தில் எவராவது வைக்கக்கூடாது.

5. சபைத் தலைவரின் அனுமதியைப் பெற்ற ஒருவர் தவிர வேறு எவரும் நகர எல்லைக்குள் எத்தெருவிலிருந்தாவது, பொது இடத்திலிருந்தாவது, குப்பை கூழம், ஊத்தை அல்லது சாம்பல் எதையாவது அகற்றக்கூடாது.

6. தோட்டி வேலைச் சேவை சம்பந்தப்பட்ட துணை விதிகளுள் ஏதாவதொன்றையேனும் மீறுபவர், இருபத்தைத்து ரூபாவிற்கு மேற்படாத தண்டம் இறுக்கப்பாத்திரராவார். சட்ட அதிகாரமுள்ள ஒரு கோட்டில் மேற்படி மீறுதலிற்குக் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட பின்னும், அல்லது தலைவரால் அல்லது தலைவரின் அதிகாரத்தைப் பெற்ற ஒருவரால் இவ்வித மீறுதல் பற்றி எச்சரித்து அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னும், தொடர்ந்து மீறினால், நாளொன்றிற்கு 5 ரூபா விகிதம் மேலதிக தண்டம் இறுக்கவும் அவர் பாத்திரராவார்.

9-1330—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

---

எல்.டி—பீ 54/47.

## ஏறாவூர் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

ஏறாவூர் பட்டின சபையால் (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 152 ஆம் 156 ஆம் பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்டு உள்ளூராட்சி அமைச்சரால், அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 15 ந உ.

#### துணைவிதி

ஏறாவூர் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, 1949, ஜனவரி 21 இன் 9,939 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு, 1965, பெப்புருவரி 5 இன் 14,312 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரமான துணைவிதியால் கடைசியாகத் திருத்தப்பட்டபடியான துணைவிதிகள், துணைவிதி 1 இல், " அபாயமும் அருவருப்பும் ஆன தொழில்கள் " என்பதன் வரைவிலக்கணத்தில், " சலவைக்கூடம் வைத்தல் " என்னும் வார்த்தைகளுக்குப் பதிலாக " சலவைக்கூடம் வைத்தல், ஒட்சிசனுல் அல்லது மின்னுல் காய்ச்சி ஒட்டதலுடன் கூடிய தொழில் செய்யும் சாலை நடாத்தல், விற்றற் பொருட்டு இரும்பு சேகரித்து வைத்தல், விற்றற்பொருட்டு பதனிடப்பட்ட மீன் அல்லது கருவாடு எத்தொகையினையும் சேகரித்து வைத்தல், புகைப்படம் பிடிக்கும் தாபனம் வைத்தல், படங்களுக்கு சட்டம்போடும் இடம் வைத்தல்," என்னும் வார்த்தைகளைச் சேர்த்தல் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

9-1323—30.9.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,715

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** *சாதாரணமாக வெள்ளிக்கிழமை* **தோறும்** *வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை* ***அரசாங்க*** *விடுமுறை நாளாக இருப்பின்* ***அதற்கு*** *முந்திய* **வேலை** *நாளில்* **வர்த்தமானி** வெளியிடப்படும். *வர்த்தமானிக்குரிய* ***அறிவித்தல்கள்*** *ஏற்றுக்கொள்ளும்* **இறுதி** *நாளும்* ***அந்த வாரத்தில்*** *ஏற்படும்* ***அரசாங்க*** *விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படார்து. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின். அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம். கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*** **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | 2. 9.66 | வெள்ளி | 26. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | 2. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | 9. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | 16. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | 23. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** | 7.10.66 | வெள்ளி | 30. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | 7.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | 14.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | 20.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| **நவெம்பர்** | 3.11.66 | வியாழன் | 27.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | 3.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | 10.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | 18.11.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| **திசெம்பர்** | 2.12.66 | வெள்ளி | 24.11.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | 2.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | 8.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | 16.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | 22.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |

*அரசாங்க அச்சகம்,*
கொழும்பு,
1966 ம் ஆு யூலை மீ 15 ந் உ.

பேர்னாட் த சில்வா,
*அரசாங்க அழுத்தகன்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.